
# ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 43] இரக்தாக்ஷி ஆண்டு சித்திரைத் திங்கள் 10—5—84 [இதழ்



ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள்

## குருபூஜை விழா 20—5—84

தருமையாதீனக் குருமுதல்வர்



ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ

குருபாதம்

## ஸ்ரீ குருஞானசம்பந்தர்

### அருள்வாக்கு

ஆடாமல் ஆடிப் புலன்வழி
அநுதினமும் [யிற்போய்
வாடாமல் வாடி மயங்கினின்
வாக்கிறந்து [றேன்மன
கூடாமற் கூடிச் சிவானந்த
குணக்கடலை [வெள்ளக்
நாடாமல் நாட அருள்கூடல்
நாயகனே. [வாழ்சொக்க

—சொக்கநாதக் கலித்துறை 7

ஆசிரியர் :-

வித்துவான்
இராமலிங்கத் தம்பிரான்
சுவாமிகள்

துணையாசிரியர் :-

மகாவித்துவான்
சி அருணைவடிவேல்முதலியார்

உ

குருபாதம்

# "ஞானசம்பந்தம்"

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 43 ‖ 10-5-84 ‖ இதழ் 6

## உட்பொருள்

எண் பக்கம்

1 தருமை வருக !
குருவருள் பெறுக ! ... 281

2 தருமைஸ்ரீலஸ்ரீகுருமகா
சந்நிதானம் அவர்கள்
வழங்கிய ஆசியுரை ... 285

3 அபிராமி அந்தாதி ... 294

4 கடிதம் ... 298

5 அன்பகம் ... 299

6 ஆண்டுகொண்ட
தனிமலர் ! ... 301

7 செய்திகள் ... 302

8 பசு ... 304

உ
குருபாதம்

# ஞானசம்பந்தம்

மலர் 43 | இரக்தாக்ஷி - சித்திரை - 10—5—84 | இதழ் 6

திருச்சிற்றம்பலம்

பொன்தயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே.

— ஞானசம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

## தருமை வருக! குருவருள் பெறுக!

**உயிர்ப்பனுவல்கள் :**

சைவத்திருமுறைகள் பன்னிரண்டு. முதல்மூன்று திருமுறைகள் திருஞானசம்பந்தர் அருளியன. நான்கு, ஐந்து, ஆறு திருமுறைகள் திருநாவுக்கரசர் திருவாய் மலர்ந்தன. ஏழாம் திருமுறை சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச்செய்தது. திருவாசகம் திருக்கோவையார் இரண்டும் எட்டாந் திருமுறை. இவை மாணிக்கவாசக சுவாமிகள் அருளியன. ஒன்பதாந் திருமுறை திருவிசைப்பாதிருப்பல்லாண்டு.இவை திருமாளிகைத் தேவர் முதலிய ஒன்பதின்மரால் அருளிச் செய்யப் பெற்றன. திருமூலதேவர் அருளிய மூவாயிரம் திருமந்திரங்கள் பத்தாம்திருமுறை. சிவபெருமானின்திருமுகப்பாசுரம் தொடங்கி பன்னிரு அருளாசிரியர்களால் அருளிச்செய்யப்பெற்ற நாற்பது

அருட்பனுவல்களின் தொகுப்பாக விளங்குவது பதினொன்ரும் திருமுறை. சேக்கிழார் சுவாமிகள் அருளிச்செய்த, அறுபத்து மூன்று தனி அடியார்கள், மற்றும் ஒன்பது தொகை அடியார் களின் அருள்வரலாருகவும் நிறையும்பெரியபுராணம் பன்னிரண் டாம் திருமுறை. இவை சைவ சமயத்தின் உயிர்ப்பனுவல் களாகக் கருதிப் போற்றப் பெறுவன.

## முத்திற வழிபாடு :

சைவ சமயத்தில் சிவவழிபாடே இன்றியமையாதது முதன்மை பெறுவது. என்ருலும், சைவ சமயத்தில் சிவவழி பாட்டுடன் ஒப்பவைத்துப் போற்றப்பெறும் வேறு இரண்டு வழிபாட்டு நெறிமுறைகளும் உண்டு. அவை குருவழிபாடும், சங்கமர் ( அடியவர் ) வழிபாடும் ஆகும். இம்முத்திற வழிபாடு களும் சைவத்திருமுறைகளுள் நிறைந்து காணப்படுகின்றன. இவற்றுள் ஒன்ருகிய குருவழிபாடு என்பது எட்டாம் திருமுறை யாகிய திருவாசகத்துள் குறிப்பாகவும், பத்தாந் திருமுறையாகிய திருமந்திரத்துள் இலக்கணங் கூறும் வாயிலாகவும் பன்னிரண் டாம் திருமுறையாகிய பெரியபுராணத்துள் அடியார்களின் வரலாறுகள் கூறும் வாயிலாகவும் விளக்கப் பெற்றுள்ளமை கருதிமகிழத்தக்கது.

## குருவே சிவம் :

' குரு ' என்ற சொல்பொதுவாக ஆசிரியர் என்ற பொருளைத் தரும். ஆசிரியர்கள் இருதிறத்தார். போதக ஆசிரியரும், ஞாஞ சிரியரும் எனக் கூறப்பெறுவர். சமயத்துறையில் குரு என்ற சொல் ஞாஞசிரியரையே குறித்து வழங்கப்பட்டு வருகின்றது. சமயத்துறையில் குருவை மானுடராகக் கருதாது சிவமாகவே கருதுதல் மரபு. ' குரு இல்லாவித்தை பாழ் ' என்பது பழமொழி. ' தொட்டுக் காட்டாத வித்தை சுட்டுப் போட்டாலும் வராது ' என்பதும் சமயத்துறையில் நெடுநாட்களாக வழங்கிவரும் இன்னெரு பழமொழி. இவை எல்லாம் சமயத்துறையில் ' ஞான குருவின் ' இன்றியமையாமையையும், சிறப்பையும் விளக்கி நிற்கக்காணலாம். இத்தகு பெருமைமிக்க ஞானகுருவை சிவ மாகவே கருதி வழிப்பட்டு இகபர சௌபாக்கியம் எய்தியோர்

பலர். இவர்களது அருள் வரலாறுகளைப் பெரியபுராணம் விரிவாக விளக்கிக் கூறுகின்றது.

## தருமையில் குருபூஜை :

திருக்கயிலாய பரம்பரைத் திருநந்தி மரபில், மெய்கண்ட சந்தானத்தில் வந்த கமலை ஞானப்பிரகாச தேசிகரின் மாணவர்களுள் சிறந்த ஒருவராகிய ஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகளால் தருமபுர ஆதீனம் கி. பி. 1560 இல் தோற்றுவிக்கப்பெற்றது. ஆதீனக் குரு முதல்வரை, தருமை ஆதீனத் திருக்கூட்டத்து அடியவர்களுள் ஒருவராகிய சம்பந்த சரணலயர் சிவமாகவே போற்றித் துதித்தனர். ' சீரணியும் நுதலின் விழி, மழுமான் நாகம், திருந்துமெரி, பொருந்துவிடம் தெரிந்திடாமல், தாரணி அன்பரை ஆள அவர்போல் வந்த சைவ சிகாமணி எவர்க்கும் தலைவன், எங்கோன் காரணியும் நெடிய பொழில் கமலைவேந்தன் கருணை மழைபொழியும் இருகடைக்கணுளன் பாரணியும் ஞானசம்பந்தன் "எனப்புகழ்ந்து போற்றியுள்ளார். தருமை ஆதீனக் குருமுதல்வர்ஜீவசமாதி கொண்டருளிய இடம் தருமையில் அருள்மிகு ஞானம்பிகை உடனுகிய அருள்மிகு ஞானபுரீசுவரர் திருக்கோயில் என்ற பெயரில் சிவாலயமாகத் திகழ்கிறது. குருஞானசம்பந்தரின் குருபூசை விழா, ஞானபுரீசுவரர் திருக்கோயில் பெருவிழாவாக ஆண்டு தோறும் தருமை ஆதீனத்தில் சிறப்பாகக்கொண்டாடப்பெற்று வருகிறது. இவ்வாண்டும் குருபூஜைப் பெருவிழா 11—5—84 வெள்ளிக்கிழமை தொடங்கி, 21—5—84 திங்கள் முடிய பதினெரு நாட்கள் சிறப்பாகக் கொண்டாடப் பெறுகிறது. 20—5—84 ஞாயிறு குருபூஜைவிழா. 21—5—84 திங்கட்கிழமை மாகேஸ்வரபூசை, பட்டினப்பிரவேசம் நிகழ்கிறது.

## சைவசித்தாந்தக் கருத்தரங்கம் :

தருமையில் ஆண்டுதோறும் சிறப்பாக நடைபெற்றுவரும் குருபூஜைப்பெருவிழா, இவ்வாண்டு மேலும் புதிய சிறப்பினைப் பெறுவது அனைவருக்கும் மகிழ்ச்சி தருவதாகும். ஆதீனக்குரு முதல்வரின் குருபூஜைவிழாவின் தொடக்கநாளாகிய 11—5—84

வெள்ளிக்கிழமை முதல் மூன்று நாட்கள் தருமையில் அனைத்துலக சைவசித்தாந்த முதல்கருத்தரங்கம் மிகப்பெரிய அளவில் ஏற்பாடாகி வருவதை அன்பர்களுக்கு முன்னரே அறிவித்திருந்தோம். தருமை ஆதீனம் இருபத்தாறுவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிகஞானசம்பந்த பரமாசாரியசுவாமிகள் திருவுளப்பாங்கின் வண்ணம் நடைபெறும் இம்மூன்றுநாள் கருத்தரங்கம் சைவ சித்தாந்த வளர்ச்சி வரலாற்றில் குறிக்கத்தக்க சிறப்பிடம் பெறும் என்பது ஒருதலை.

சைவசித்தாந்தச் செந்நெறியினைக் கடந்த 450 ஆண்டுகளாகப் போற்றிவரும் தருமைஆதீனம், இவ்வுயர்நெறி உலகளாவிய சிறப்பினைப் பெறச் செய்யவும், உலகில் தோன்றிய ஏனைய தத்துவச் சிந்தனைகளோடு ஒப்பாய்வு செய்து இதன் பெருமையை உலகுக்கு அறிவிக்கவும் இதுபோது இக்கருத்தரங்கினைத் திருச்சிராப்பள்ளி, பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைந்து நடத்துகின்றது. உலகெங்கிலும் உள்ள சைவ சித்தாந்தப் பேரறிஞர்கள் பலரும் பங்கேற்கும் இப்பெருவிழாவில் சுமார் ஐந்நூறு பார்வையாளர்களும் பங்கேற்கிறார்கள். மற்றும் பல்துறை அறிஞர்களும் சைவசித்தாந்தச் செந்நெறிக்கு ஆராதனை செய்து அஞ்சலி செலுத்தும் பெருவிழாவாகக் குருமுதல்வரின் குருபூஜைவிழா நிகழ்வது பெரிதும் மகிழ்ச்சிக்குரியது.

தருமை வருக !

திருவருள் பெறுக !

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்
26 ஆவது குருமகாசந்நிதானம்

**ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்**

**அனைத்துலக சைவசித்தாந்த முதல் கருத்தரங்க விழாவிற்கு**

வழங்கியருளிய

# ஆசியுரை

10—5—84

“ அறுவகைச் சமயத் தோர்க்கும் அவ்வவர் பொருளாய், வேறுங்
குறியது உடைத்தாய் வேதாகமங் களின் குறியிறந்தங்கு
அறிவினில் அருளால் மன்னி அம்மையோ டப்பனுகிச்
செறிவொழி யாது நின்ற சிவனடி சென்னி வைப்பாம் ”

உலகில் பொதுவாக உயிரினங்கள் பலவற்றிலும் ஏற்றத் தாழ்வுகள் இருத்தலைக் காண்கின்றோம். அவ்வாறே சிறப்பாக மனிதசமுதாயத்திலும் இவ்வேற்றத் தாழ்வுகள் இருத்தலைப் பார்க்கின்றோம். பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்பது பொதுவிதி; என்றாலும் அவரவர் செய்யும் செயலே அவரவரை உயர்த்தவோ தாழ்த்தவோ செய்கின்றது. இதனை ஸ்ரீ திருஞான சம்பந்தர்,

“ அவரவர் வினைவழி அவரவர் வந்தனர்
அவரவர் வினைவழி அவரவர் அனுபவம் ”

என்று அருளிச்செய்தார்.

இந்நிலையிலேயே மெய்ஞ்ஞானியர்களும், உலகியலில் ஆய்வறிஞர்களும் இவ்வுயர்வு தாழ்வுகட்குரிய காரணங்களை அறியமுற்பட்டனர்.

மெய்ஞ்ஞானியர்கள் மக்களின் இவ்வேற்றத் தாழ்வுகட்கு அவரவர் முற்பிறவிகளிலும் இப்பிறப்பிலும் செய்யும் நல்வினை தீவினைகளே காரணம் எனக்கண்டறிந்தனர்.

ஆய்வறிஞர்கள் முயற்சியும் முயற்சி இன்மையுமே இவற்றிற்குக் காரணம் என மேம்போக்காகக் கூறி வருகின்றனர்.

மெய்ஞ்ஞானியரின் ஆய்வுக் கொள்கைகள்; சமயம் மதம் என்ற பெயரைப் பெற்றன. ஆய்வறிஞர்களின் கொள்கைகள் கட்சிகள் என்ற பெயரைப்பெற்றன. இவ்விருவகைஆய்வினுள் முயற்சியே உயர்வு தாழ்வுக்குக் காரணமாதலை நாம் ஏற்றுக் கொள்வதில் இடர்ப்பாடுகள் உள்ளன. எவ்வளவு முயற்சி செய்யினும் ஒருவனுக்கு ஆக்கம் தரும் ஊழ் இருந்தால் அது நன்மை விளைவிக்கும் என்பதையும் அதற்கு மாறுன ஊழ் இருக்குமாளுல் முயற்சி நற்பயன்களைப் பெரிதும் தாராது என்பதையும் மெய்ஞ்ஞானியர் ஆராய்ந்து நமக்கு உணர்த்தியுள்ளதோடு, அம்முயற்சியும் ஊழ்வழியே தான் இயங்கும் என்பதையும் உணர்த்தியுள்ளனர்.

ஊழுக்குக் காரணம் அவரவர் பல பிறவிகளில் செய்த நல்வினை, தீவினைகளே என்பதை மெய்ஞ்ஞானியர் கண்டறிந்து அறிவித்துள்ளனர்.

> " இலர்பல ராகிய காரணம் நோற்பார்
> சிலர்பலர் நோலா தவர். "

> " பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
> கருமமே கட்டளைக் கல். "

என்றகுறள்மணிகள்மெய்ஞ்ஞானியர் கண்டறிந்த சமய தத்துவ உண்மைகளை நன்கு தெளிவு செய்தலைக் காணலாம்.

நோன்பு, தவம், முயற்சி என்பன பொருள் ஒற்றுமை உடைய சொற்களாகும். அதுபோல் வினை, கருமம், செயல் என்பனவும் ஒருபொருளுணர்த்தும் சொற்களேயாகும். நோன்பு வினை, கருமம் என்பன சமயதத்துவக் கருத்துக் குறியீட்டுச் சொற்களாக வழங்கப்பட்டாலும் நாம் செய்யும் நற்செயல் தீச்செயல்களையே அவை அறிவிக்கின்றன.

உலகியலில் நாம் அடையும் இன்ப துன்பங்களுக்கு நாம் செய்யும் நல் வினை தீவினைகளே காரணம் என்ற சமய தத்துவ உண்மையைச் சமுதாயம் உணர்ந்தால், ஒவ்வொருவரும் உழைத்துப் பிழைக்கத் தலைப்படுவர்; தீய செயல்களை விடுத்து நற்செயல்களில் ஈடுபடுவர்; படவேமக்கள் மேன்மையடைவர்; நாடு நலம் பெறும். இத்தகைய தத்துவச் சிந்தனையை உலகுக்களித்து உயர்வு பெற்றது தமிழகம்.

### தொன்மைச் சமயம் சைவம் :

தமிழகம் மிகத் தொன்மை வாய்ந்த வரலாற்றைக் கொண்டது. ஏறத்தாழ கி. மு. 600 ஆண்டுகளுக்கு முன்னமேயே தமிழர் நாகரிகம் சிறந்த நிலையில் இருந்தது என்பதனை ஆய்வு அறிஞர்களும், அகழ்வாய்வு விற்பன்னர்களும் காட்டுகின்ற தடயங்கள் கொண்டுணரலாம். இந்த அளவு பழமை வாய்ந்த நாகரிகம் வேறு எந்த நாட்டிற்கும் இல்லை. இத்தகைய தொன்மை வாய்ந்த தமிழர்களின் நாகரிகத்தில் சிவநெறிக்கொள்கையே விளங்கியிருந்தது என்பதனை அகழ் வாய்வுத் தடயங்களும் வரலாற்றுக் குறிப்புக்களும் நன்கு உணர்த்துகின்றன.

### சிந்தனைத்தூண்டல்கள் :

இத்தகைய தொன்மையான நாகரிகத்தில் காலப் போக்கில் ஒரு சில மாறுதல்கள் ஏற்படுவது இயற்கை. அவ்வகையில் கி. மு. 3000 ஆண்டுகளுக்கு முன்பு, அதாவது இற்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு ஆரியரின் நாகரிகம் திராவிட நாகரிகத்துடன் கலந்தது என்பர். அப்படிக் கலந்த வகையில் ' வைதிக சமயம் ' எனும்ஒரு புதிய சமயக்கொள்கை உருவாயிற்று. இதில்வேள்விகள் மிகச்சிறந்தன என்றும், இன்றி யமையாதன என்றும் வலியுறுத்தப்பட்டது. இதைச் சைவம் ஏற்றுக்கொண்டது. வேதவழிப்பட்ட வைதிக மதமும் சைவக் கொள்கையாகிய முப்பொருள் உண்மையை ஒத்துக்கொண்டது இதற்கு இருக்கு வேதம் 50 முதல் 56 வரையுள்ள பகுதிகள் சான்று பகர்கின்றன. இதனை விரும்பாத சிலர், தனியே பிரிந்து வேறுமதத்தையும், மதநூல்களையும் உருவாக்கி, மக்களிடையே அவற்றைப் பரப்புவாராயினர். அவர்களது மதம் சமணமாகும். இச்சமணத்திற்கும், சைவத்திற்கும் சில பல ஒற்றுமைகள் உள்ளன என்று ஆய்வறிஞர்கள் குறிக்கின்றனர். ரிஷபதேவர், சிவகதி என்பனவற்றை எடுத்துக்காட்டி அவர்கள் இதனை விளக்குகின்றனர். எனினும் இச்சமணசமயத்திற்குக் கடவுட் கொள்கை இல்லை. எனவே இவை பற்றிய முழுமையான, முடிவான ஒரு கருத்திற்கு வர இயலவில்லை. வேத காலத்திற்கு முற்பட்ட நாகரிகம், ஆரியர்கள் கலப்பால் விளைந்த விளைவுகள், சமணம் சைவத்திலிருந்து பிரிந்த பிரிவு, பின் சமணத்தின் கடவுள் கொள்கை மறுப்பை வெறுத்துச் சைவக் கொள்கைஉருவானது என்பனபோன்றகருத்துக்களை உண்மை காணும் உணர்வோடும், நடுநிலை பாருநிலையிலும் ஆய்ந்து முடிவு காணவேண்டுவது மிகவும் அவசியமாகும்.

"எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"

என்னும் வள்ளுவர் வாக்கிற்கிணங்க எந்தக்கொள்கையினையும் விருப்பு வெறுப்பு இன்றி ஆய்வு செய்து ஒருநல்ல முடிவுக்குவர விரும்பியே, இந்த "சைவசித்தாந்த ஆய்வுமையம்" தொடங்கப் பெறுகிறது. சைவத்திற்குரிய முக்கிய பொறுப்பில் உள்ள ஸ்தாபனம் இவ்வாதீனம் ஆதலின் அதைச் செய்ய வேண்டும் என்னும் கடமை உணர்வோடு இவ் ஆய்வு மையத்தைத் தொடங்க முடிவு செய்துள்ளது.

இந்த ஆய்வுமையம் தொடங்குவதற்கு முன்பு, சமயத்தில் சமய தத்துவங்களில் ஈடுபாடும் சமயக்கொள்கையில் தெளிவும் கொண்டு வாழ்ந்துவரும் உலக அறிஞர்கள் பலரை அழைத்து அவர்களின் கருத்துக்களையும் ஆலோசனைகளையும் தெரிந்து கொள்ளவே, 'அனைத்துலக சைவசித்தாந்த முதல்கருத்தரங்கம்' நடத்தப்படுகிறது. இக்கருத்தரங்கம் பல்வேறு கருத்துக்களைத் தெரிந்து தெளியவும், நம்முடைய முயற்சிக்கு அரணாக - உறுதுணையாக அமையவும் துணைபுரியும் என்றுநம்புகின்றோம்.

## ஆதீனமும் அனுபூதி நிலையும் :

இவ்வாய்வு மையம் அமைக்கவும் இந்தக் கருத்தரங்கம் நடத்தவும் நமது ஆதீனத்திற்குத் திருவருள் வாய்ப்பாக ஒரு பொருத்தமும் காணப்படுகிறது. அதுபற்றியும் இங்கேசிந்திப்பது பயன் உடையதாய்இருக்கும்.

தருமையாதீனக் குருமுதல்வர் ஸ்ரீ குருஞானசம்பந்தர், கமலை ஸ்ரீ ஞானப்பிரகாசரின்சீடர். அவர் ஸ்ரீ ஞானப்பிரகாசரின் மெய்த்தொண்டர்களின் செயல்களைப் பற்றி ஒருபாடலில் விளக்கம் தருகிறார்.

"ஆய்வார் பதிபசு பாசத்தின் உண்மையை ஆய்ந்தறிந்து
காய்வார் பிரபஞ்ச வாழ்க்கையெல் லாம்கல்வி கேள்வி அல்லல்
ஒய்வார் சிவானந்த வாரியுள் ளேயொன் றிரண்டுமறத்
தோய்வார் கமலையுள் ஞானப்ர காசன்மெய்த்தொண்டர்களே"

என்பது அப்பாடலாகும். கமலை ஞானப்பிரகாசரின் தொண்டர்கள், பதி, பசு பாசத்தின் உண்மைகளை ஆய்வார்கள்; ஆய்ந்து அறிந்த பின்னர் பிரபஞ்ச வாழ்க்கையைக் காய்வார்கள்; கல்வி கேள்வி அல்லல் ஒய்வார்கள்; ஒன்றும் இரண்டுமறச்சிவானந்த

வாரியுள்ளே தோய்வார்கள் என்று குரு முதல்வர் தெரிவிக்கின்றார். இந்த ஆதீனம் ஞான அனுபூதிச் செல்வராய் விளங்கிய ஸ்ரீ குருஞானசம்பந்தரால் தோற்றுவிக்கப் பெற்றதாதலின் அவர் வழிவந்த பலரும் அனுபூதிச் செல்வர்களாய் விளங்கியுள்ளார்கள்.

இதற்குப் பல எடுத்துக்காட்டுக்களைக் கூறலாம். " சோடச கலாப் பிராசாத சட்கம் " என்னும் ஒருநூல் தருமை ஆதீனக் குரு முதல்வரால் அருளிச் செய்யப்பெற்றது யோக முறையினை அனுபூதி நிலையில் கொண்டிருந்த ஆதீனம் இது. ஆதலால் இதனைப் பல குருமூர்த்திகள் கைக்கொண்டிருந்தனர் என்பதற்குச் சில அனுபூதி நிகழ்ச்சிகள் கிடைக்கின்றன நான்காவது குருமூர்த்திகள் குமரகுருபரர்க்குக் குருநாதராகவிளங்கியவர்கள். செந்திலாண்டவன் திருவருளையும் மதுரையில் மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் அரங்கேற்றுங்கால் மீனாட்சியம்மையின் திருக்கரங்களால் முத்து மாலையையும் பெற்று வந்த, குமரகுருபரர், வாக்குத்தடைப்படும் இடமே குருநாதரைப் பெறும் இடம் என்னும் நிலையில், பல தலங்களைத் தரிசித்துத் தருமை வந்து அடைந்தார். குருமூர்த்திகள், " ஐந்துபேர் அறிவும் கண்களே கொள்ள " என்னும் பெரியபுராணப் பாடலுக்குப் 'பொருள் கூறுக' என்று கேட்காமல், " அனுபவப் பயன் கூறுக " என்று கேட்டமை, குருநாதர் அனுபூதிச் செல்வராய்த் திகழ்ந்தவர் என்பதை மெய்ப்பிக்கும். ஸ்ரீ சொக்கநாதப் பெருமான் பூஜை மடத்திற்குப் பின்னே பதினாறு ஒடுக்கம் அமைந்திருப்பதும் தருமையாதீனம் அனுபூதிமான்களின் உறைவிடம் என்பதை உணர்த்தும். குருமுதல்வர்,

" ஒருகோடி ஆகமங்கள் எல்லாம் உணர்ந்தும்
பெருகுதவம் சித்தியெல்லாம் பெற்றும் — குருவருளால்
வைத்த படியிருக்க மாட்டாத மாந்தர்க்குச்
சித்தசல னம்மாந் தினம் "

என்றும்,

" பேசானு பூதி பிறக்க எனதுளத்தில்
ஆசா பசாசை அகற்றுவாய் — தேசாரும்
சிற்பரா னந்தா திருவால வாயுறையும்
தற்பரா சொக்கநா தா "

என்றும் அருளும் அனுபூதி வாக்குகளும் இங்கு ஒப்புநோக்கிச் சிந்திக்கத் தக்கவையேயாம்.

ஏழாவது குருமூர்த்திகள் காலத்தில், தஞ்சை மன்னன், சிலர் வார்த்தைகளைக்கேட்டுக் குருமூர்த்திகளின் திருக்கோயிலை இடிக்கச் சொல்ல, குருநாதர் ஒன்றும் பதட்டமுறாமல் திருவருள் சிந்தனையில் ஆழ்ந்து,

" ஈசன் பலகீனன் என்றக்கால் ஆலயத்தில்
மோசம் வந்ததென்று மொழியலாம் — ஈசனே
ஆக்குவதும் ஆக்கி அழிப்பதுவும் தானானால்
நோக்குவதென் ! யாம்பிறரை நொந்து "

" தேசம் சிவாலயங்கள் சேர வலையொரு
மோசம் வந்ததையோ முதல்வனே — தேசத்து
மன்னை வெறுப் பேனே வருவினையை ஊட்டுவிக்கும்
உன்னைவெறுப் பேனே உரை."

என்னும் பாடல்களைச் சிந்தித்திருந்தனர் என்பதும் அனுபூதி நிலைக்குச் சான்றாகும். இங்ஙனம் வழிவழி வந்த குருமூர்த்திகள் அனைவரும் அனுபூதிச் செல்வர்களாய்த் திகழ்ந்தமையை அறியலாம்.

### வழிவழிச் சிந்தனை :

இத்தகைய உயர்நிலையில் அவர்கள் இருந்ததனால் அவர்கள் பலகாலம் உலகுக்கு உணர்த்தி வந்த சைவசித்தாந்தக் கருத்துக்கள் ஆதிகுருமுதல்வர் காலம்தொடங்கிக் கால நிலைக்கு ஏற்ப, கிளைத்துச் செழித்து வளர்ந்து வந்தது. இவை உலகெங்கும் பரவவேண்டும் என்ற திருவருள் எண்ணம், 23 ஆவது குருமகாசந்நிதானம் அவர்கள் காலத்தில் அரும்பாகி, 24 ஆவது குருமகாசந்நிதானம் அவர்கள் காலத்தில் மலர்ந்து, 25 ஆவது குருமகாசந்நிதானம் அவர்கள் காலத்தில் காய்த்து, இப்பொழுது கனியத் தொடங்கியுள்ளது. எனவே உலகு தழுவிய நிலையில் சைவசித்தாந்தம் பரவ வேண்டும் என்று செயற்படும் இவ் எண்ணம் அனுபூதிச் செல்வர்களின் வழிவழிச் சிந்தனையின் முதிர்வே என்பது தெளிவாகப் புலனாகும்.

### சைவசித்தாந்தம் :

சைவ சித்தாந்தக்கொள்கையின் அடிப்படைபற்றி ஈண்டுச் சிந்திப்பது பொருந்தும்.

கடவுள், உயிர்கள், தளை என்னும் மூன்றும் அழிவில்லாத நித்தியப்பொருள்கள் என்பதும், ஆனால் இவை ஒவ்வொன்றும்

தரத்தினில் – தகுதியினில் வேறுபாடு உடையன என்பதும் அறிதல் தகும். கடவுள், கருவி கரணங்கள் இன்றித்தாமே அறியும் தன்மையர்; பேரறிவுப் பொருள்; பேரின்பப் பொருள். உயிர்கள் அறிவுடையன ஆயினும் கருவி, கரணங்கள் இன்றி அறிய இயலாதன. அத்தகைய கருவி கரணங்கள் இருப்பினும் சிற்றறிவும், சிறு தொழிலும் உடையன; இறைவன் அறிவித்தாலன்றி அறிய இயலாதன. இறைவன், கருவி கரணங்களை உயிர்களின் ஈடேற்றம் கருதிப்படைத்துக் கொடுக்கின்றார். இத்தகைய கருவி, கரணங்களைக்கொண்டு உயிர்கள் ஈடேற்றம் பெற்று முடிவில் இறையடியை அடைகின்றன. கடவுள் ஒருவர். உயிர்கள் பல. இதுவே முடிந்த முடிபாகிய சித்தாந்தம்.

தளை என்பது ஆணவம், கன்மம், மாயை என்னும் மூன்று வகைப்படும். இவையே இறையடியை உயிர்கள் அடையத் தடையாக இருப்பன. இவற்றின்று உயிர்கள் விடுபட்டு, இறையருளால் இன்புறும் நிலை எய்தவே உயிர்கள் பல பிறவிகளை எடுக்கின்றன.

## அறிஞர் பலர் கருத்து :

இத்தகைய உயர்ந்த கொள்கையாகிய சைவசித்தாந்தம் மிகத்தொன்மையும், வன்மையும், தலைமையும், சார்ந்த ஒரு சிறந்த தத்துவக் கொள்கை என்று மேலைநாட்டு ஆய்வறிஞர்கள் பலரும் ஆய்ந்து கூறுகின்றனர். இருபதாம் நூற்றுண்டில் வாழ்ந்து மறைந்த திரு. வி. க. அவர்கள், "சைவ சித்தாந்தத்தை மையமாக வைத்துத்தான் பல சமயங்களும் கிளைத்தன" என்று கூறியுள்ளார். அறிஞர் மறைமலை அடிகளும் இதனையேகூறியுள்ளார். இக்கருத்தரங்கில் கலந்துகொண்டுள்ள பிரெஞ்சு ஆய்வு மைய இயக்குநர் திரு N. R. பட் அவர்களும் "சைவ சித்தாந்தமே உலகச் சமயக்கொள்கைகள் அத்துணையிலும் உயர்வுடையது" என்றுகூறுகின்றார். கிறித்துவ சமயத்தைச் சார்ந்த திரு. அந்தோணி குருசு அவர்கள், "எதிர் காலத்தில் சைவசித்தாந்தமே உலகை நடத்திச்செல்லும் சமயமாக இருக்கும்" என்றுகூறுகின்றார். எனவேஇத்தகைய உயர்வுடைய கொள்கையை அறிந்துகொள்ளாமல் இருப்பது இதில்ஈடுபடாத குறையே தவிர, தத்துவத்தின் குறையில்லை.

## ஆய்வு மையம் :

இச்சிறந்த கொள்கையை உலகு தழுவிய நிலையில் பரப்ப வேண்டும் என்று கருதி அதற்கு ஓர் ஆய்வு மையம் தொடங்கக்

காரணமாயிருந்தவர்கள் சிலர். அவர்களில் இன்றைய தமிழக அரசின் கல்வி அமைச்சராய் விளங்கி வரும் மாண்புமிகு செ. அரங்கநாயகம் அவர்கள் ஒருவர் ஆவர். அவர்கள் 1954இல் இங்கு நடைபெற்ற சைவசித்தாந்தப்பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டவர். அவர்கள் சில ஆண்டுகட்கு முன்பு இங்கு வந்து இருந்தபோது சைவசித்தாந்தம் உயர்வும் உன்னதமும் உடைய கொள்கை; அதனை உலகம் முழுவதும் பரப்புதல்வேண்டும். அதற்கு ஓர் ஆய்வு மையம் தேவை என்று கூறினார்கள். ஏழு ஆண்டுகட்கு முன்பு பொருளாதாரத் துறைப் பேராசிரியர் திரு. பா. நடராசன் அவர்கள் தருமை ஆதீனம், தமிழக அரசு, மத்திய அரசு ஆக மூன்றும் இணைந்து ஆண்டொன்றுக்கு ரூ. 6, 00000/ – செலவில், ஆய்வுமையம் இயங்க ஒரு திட்டம் கொடுத்தார். மத்திய அரசினையும் மாநில அரசினையும் அணுகி உதவி பெற முயற்சிக்கப் பட்டது. இங்ஙனமான பல முயற்சி களில், இது தொடங்கினால் நிலையாக நடைபெற வேண்டுமே என்னும் உணர்வில் காலம் தாழ்த்துவிட்டது. இப்பொழுது ரூ. 20 லட்சம் நிலைநிதியில் இவ்வாய்வு மையத்தைத் தொடங்கி நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது இதற்கு ஆதீனத்தில் ஓரளவு நிதியும்சேர்க்கப்பட்டுள்ளது.

இந்த நிலைநிதி முழுமை பெறவும் இவ்வாய்வு மையம் மென் மேலும் ஆல்போல் தழைத்துப் பெருகி வளரவும் தமிழக அரசு, சமய நிறுவனங்கள், சமய அன்பர்கள், பிற துறை அறிஞர்கள் அனைவரும் உறுதுணையாயிருப்பார்கள் என நம்புகின்றோம். அனைவரும் எந்தஅளவிற்கு உறுதுணையாக இருக்கின்றார்களோ அந்த அளவுக்கு இது பெருகி வளர்ந்து மெய்ஞ்ஞானப்பல்கலைக் கழகமாகத் திகழும்.

**கருத்தரங்கம் :**

இவ்வெண்ணம், திருச்சி பாரதிதாசன் பல்கலைக் கழகமும், தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகமும் தொடங்குவதற்கு முன்பே உருவாகியது. இவ்வாய்வு மையத்தைப் பல்கலைக் கழகத்துடன் இணைந்து நடத்தினால் தான் உலகளாவிய நிலையில் கொண்டு செல்லலாம் என்று கருதிப் பாரதிதாசன் பல்கலைக் கழகத்துடன் இணைந்து இது தொடங்கப் பெறுகிறது. இதைத் தொடங்கு வதற்கு முன்பு ஒரு கருத்தரங்கம் அனைத்துலக அளவில் நடத் துவது நல்லது என்று பாரதிதாசன் பல்கலைக்கழகத் துணை வேந்தர் திரு. பி. எஸ் மணிசுந்தரம் அவர்கள் ஆலோசனை கூறினர். அதற்கேற்ப உலகு தழுவிய ஒரு கருத்தரங்கமும்

நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இக்கருத்தரங்கில் பல நாடுகளிலிருந்தும் பலர் பலவகைத் தலைப்புக்களில் தங்களுடைய ஆய்வுகளை நல்ல முறையில் செய்துகொண்டுவந்திருக்கிறார்கள். அவர்கள் இந்த மூன்று நாட்களும் இங்கேயே தங்கியிருந்து மக்களுக்குப் பயனுறும்வகையில் இந்த ஆய்வு அரங்கத்தை நடத்த இருக்கிறார்கள். இதனைத் தொடங்கி வைக்கச் சிவஞானச் செல்வர், முன்னாள் துணை ஜனாதிபதி மாண்புமிகு ஜாட்டி அவர்கள் வந்துள்ளார். இந்நிகழ்ச்சிக்குத் தலைமையேற்று விழாமலரை வெளியிட, சிவம் பெருக்கும் சீலர், தொழிலதிபர், திரு. நா. மகாலிங்கம் அவர்கள் வந்துள்ளார். மற்றும் அமைச்சர்களும் அறிஞர் பெருமக்கள் பலரும் கலந்து கொண்டு சிறப்புரையாற்ற இருக்கிறார்கள்.

**ஆசியுரை :**

விழா எல்லா வகையிலும் இனிதே பயனுற நிகழவும், தொடங்கப்பெறும் ஆய்வுமையம் மென்மேலும்வளர்ந்துமெய்ஞ்ஞானப் பல்கலைக் கழகமாகச் சிறந்து திகழவும், எல்லாம் வல்ல செந்தமிழ்ச் சொக்கன்திருவருளைச் சிந்திக்கின்றோம்.

"வான்முகில் வழாது பெய்க; மலிவளம் சுரக்க; மன்னன்
கோன்முறை அரசு செய்க; குறை விலா(து) உயிர்கள் வாழ்க;
நான்மறை அறங்கள் ஓங்க; நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகம் எல்லாம்"

வாழ்க சைவம்!

வளர்க ஆய்வு மையம்!

கட்டுரை எண். 48

# அபிராமி அந்தாதி

டாக்டர் புலவர் திரு. K. சந்தானராமன், M A., B. Lit., D. P. P. A., D. U. N., I. U.
பருத்தியூர்.

வாழும் படியொன்று கண்டுகொண்டேன்; மனத்தே [யொருவர்
வீழும் படியன்று; விள்ளும் படியன்று; வேலைநிலம்
ஏழும் பருவரை எட்டும் எட்டாமல் இரவுபகல்
சூழும் சுடர்க்கு நடுவே கிடந்து சுடர்கின்றதே. 47

### அ. வாழும் படியொன்று கண்டுகொண்டேன்

(1) அழிவற்ற நிலையில் வாழுவதற்கு ஏதுவான மெய்ப் பொருளான ஒன்றினைக் கண்டுகொண்டேன்.

(2) 'ஒன்று' என்பதற்கு, ஒன்றான மெய்ப்பொருள், ஒன்றாய் இணைந்த சிவசக்தி, ஒரு வழிபாட்டு முறையான 'ஸ்ரீ வித்யா' நெறி, ஒரு யோக முறையான குண்டலினி யோக நெறி என்றெல்லாம் பலவாறு பொருள் கொள்ளலாம்.

(3) வாழும் – திருக்கடவூரின்கண் இருந்து வாழுகின்ற, படியொன்று – சக்தியின் ஒரு வடிவமாகிய அபிராமியினைக் கண்டு கொண்டேன் எனவும், பொருள் கொள்ளலாம். காஞ்சிமுககவி, தனது 'முகபஞ்சதியில், 'காஞ்சியில் வாழும் ஒன்று,' 'கம்பா நதிக்கரையில் திகழும் ஒன்று' என்றெல்லாம் காமாட்சியினை, 'ஒன்று' என்ற சொல்லால் குறிக்கிறார்.

(4) "மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும் எண்ணில் நல்ல கதிக்கு யாதுமோர் குறைவில்லை" என்ற ஞானசம்பந்தர் வாக்குப்படி, இம்மை மறுமையினில் சிறப்பான வாழ்வினை அடையத்தக்க 'பெண்ணின் நல்லாளொடும் பெருந்தகை'யினைப் போற்றுகின்ற ஒரு நல்ல நெறியினைக் கண்டு கொண்டேன் என்கிறார்.

(5) அபிராமி பட்டரின் காலத்து கரும நெறியாளர் ஓதல், ஓதுவித்தல் மற்றும் வேட்டல் வேட்பித்தல் மூலம் பொருள் ஈட்டி வசதியாய் வாழக் கற்றிருந்தனர். அதாவது பிழைக்கக் கற்றிருந்தனர். ஆனால் அபிராமிபட்டரோ ஞான மார்க்கத் தினைப் பின்பற்றி வாழத் தெரிந்தவராக இருந்தார். எனவே அவர் கண்டு கொண்டது 'வாழும்படி யொன்று' ஆகிய நெறி.

(6) "ஒத்தது அறிவான் உயிர் வாழ்வான் மற்றையான் செத்தாருள் வைக்கப்படும்" என்ற திருக்குறட்படி 'ஒப்பரவு' செய்து, அதாவது, சமுதாயத்திற்கு உகந்த நற்செயல்களைச் செய்து வாழ்வதே வாழ்க்கை ஆகும், அச்செயல்களைச் சமய நெறியினைப் பின்பற்றி நின்ற சான்றோர்களே பெரிதும் கடைப் பிடித்து வந்தனர் என்பது வரலாறு கண்ட உண்மை. அச்சமய நெறிபற்றி ஒப்புரவொழுகிய அபிராமி பட்டர் வாழும்படி யொன்று கண்டவர். அதாவது ஒத்ததறிந்து உயிர் வாழ்ந்தவர்,

(7) 'மரணமிலாப் பெருவாழ்வு' என்று யோகிகளும் சித்தர்களும் குறிப்பிடும் 'ஜீவன் முக்த' நிலையினை எய்திப்பின் இறைவனுடன் இரண்டறக் கலந்து வாழும் நெறியினை 'வாழும் படி யொன்று' என்றார்.

(8) யான் பெற்ற பேறு இவ்வையமும் பெற்று வாழ வேண்டுமென்று எண்ணியதல்லாமல் அவ்வூரார் எண்ணியது போல ஏனையோர்க்குத் தீங்கு விளைத்து அவர்களை அழிக்கும் துர்தேவதை வழிபாட்டை அவர் பின்பற்றவில்லை. அவர் கண்டது தானும் பிறரும் வாழவேண்டும் என்று எண்ணிய நெறியேயாகும்.

## ஆ. மனத்தே ஒருவர் விழும் படியன்று விள்ளும்படியன்று

(1) யான் அறிந்து கொண்ட அவ்வொன்றினைப் பிறர் மனத்தில் பதியும் படியும் விளங்கும் படியும் விரித்துரைக்கவும் இயலும் தன்மைத்தன்று என்கிறார்.

(2) மெய்ப்பொருளும் அதனையுணர்த்தும் சமய நெறி களின் தத்துவங்களும் தனிமனிதன் தன் ஞானத்தால் உணரத் தக்கதேயில்லாமல் விளக்கத்தக்கதும் காட்டத்தக்கதும் அல்ல. எனவேதான் நம்முன்னோர் "கண்டவர் விண்டிலர்; விண்டவர் கண்டிலர்" என்றனர்.

(3) தன்னந்தனி நின்ற 'ஒன்றினைக் கண்டு கொண்டார் அநுபூதிமான் அருணகிரிநாதர். "அதனை இன்னம் ஒருவர்க்கு இசைவிப்பதுவோ?" என்று வினவுகிறார்.

(4) திருக்கடவூர் மக்கள் கருதியதுபோல் அபிராமிபட்டர் தீயசக்திகளை வழிபடும் நெறியினை மேற்கொண்டிருந்தால் அவ் வழிபாட்டின் மூலம் பிறர் வீழ்ந்து இன்னல் படவும் எண்ணி யிருக்கக்கூடும். மற்றும் அத்தகைய வழிபாடியற்றுவோர் நண்பர்களையும் குடும்பத்தினரையும் பிரிக்க விரும்பும் 'மித்ர பேதம்' என்னும் பிரயோகத்தினைக் கையாளுவர். அதாவது எதிரிகள் வீழவும் விண்டுபோகவும் விரும்புவர்.

ஆனால் அபிராமிபட்டர் அவ்வாறு பிறர் வீழவும் விள ளவும் (பிரியவும்) எண்ணினார் இல்லை. வாழும்படி கண்டுகொண்டாரே அன்றி வீழும் படியும் விள்ளும் படியும் விரும்பும் தாழ்ந்த நெறியான தீயசக்தி வழிபாடாற்றவில்லை என்பதற்கு இதுவும் ஒரு சான்று.

## இ. வேலைநிலம் ஏழும் பருவரை எட்டும் எட்டாமல் சூழும் சுடர்க்கு நடுவே கிடந்து சுடர்கின்றதே.

(1) அவ்வொன்றாகிய மெய்ப்பொருள் ஏழுகடல்கள், ஏழு உலகங்கள், எட்டு மலைகள் முதலிய யாவற்றையும் கடந்த நிலையில் இரவும் பகலும் ஒளிவீசும் சுடருக்கு இடையில் எழுந் தருளிச் சுடர்விட்டுத் திகழ்கின்றது.

(2) வேலைநிலம் ஏழு என்பதற்குக் கடலால் சூழப்பட்ட ஏழு நிலப்பகுதிகள் அல்லது 'சப்தத்வீபங்கள்' என்று பொருள் கொள்வர். மற்றும் வேலை ஏழும் நிலம் ஏழும் என்றும் பொருள் கொள்வர்.

(3) குண்டலினியோகத்தில்ஏழுகடல்,ஏழுநிலம் ஆகியவை மூலாதாரம் முதல் சகஸ்ராரம் ஈறாகவுள்ள ஏழு நிலைகளைக் குறிக்கும். குண்டலினி தங்கும் இடமாதலால் அவற்றை நிலம் எனவும், ஸப்ததாதுக்களாகிய அமுதரஸம் தேங்கும் இடங் களாதலால் அவற்றை ஏழுகடல் எனவும் குறிப்பிடுவர்.

(4) அவ்வாறே வெளி அண்டத்தில் நிடதம், ஏமகூடம், இமயம், நீலம், சுவதம், இருங்கவான், மாலியவான், கந்தமா தானம் எனக் குறிப்பிடப்படும் எட்டுமலைகள் பிண்டாண்டம் எனும் நமது உடலில் மூலாதாரம் நீங்கலான ஐந்து ஆதாரங்கள் மற்றும் பிரம்ம - விஷ்ணு - ருத்ரக் கிரந்திகளாகிய மூன்று முடிச்சுக்கள் மலைகளாகும். ஏனெனில் மூலாதாரத்தினின்று எழும்பும் - ஏறும் குண்டலினி சக்தி அவ்வெட்டு நிலைகளையும் கடந்து சகஸ்ராரத்தை அடைகிறது.

(5) மேருவின் நடு சிகரத்தில் அம்பிகை உறைகிருள். அம் மேருவின் எட்டுத் திக்குகளிலும் உள்ள வேறு எட்டுச் சிகரங்களில் இந்திரன் முதலான எண்மர் உறைகின்றனர் என்பர். அவ்வெண் சிகரங்களே பருவரை எட்டு. அவற்றினுக்கும் அப்பால் உள்ள மேருவின் நடுச்சிகரமே அம்பிகை ஒளிரும் நடுஇடம்.

(6) சூழும் சுடர்க்கு நடுவே கிடந்து சுடரும் சுடர் என்பது இரவும் பகலும் சுற்றித்திரியும் சந்திர சூரியர்களுக்கு நடுவண் உறையும் சுடரனைய அன்னையினைக் குறிக்கும்.

' பானுமண்டல மத்யஸ்தா ' - சூரியமண்டலத்தின் நடுவில் இருப்பவள் எனவும் ' சந்த்ரமண்டல மத்யகா -சந்திரமண்டலத்தில் வருபவள் எனவும் சகஸ்ரநாமம் குறிப்பிடுகிறது.

(7) இரவு பகல் எப்போதும் குடகோளார்த்தம் மற்றும் குணகோளார்த்தம் இரண்டினையும் சுற்றித்திரியும் சூரியனின் நடுவில் அம்பிகை சந்திக்கடன் இயற்றும் காலங்களில் சரஸ்வதி, சாவித்திரி, காயத்திரி என்னும் தேவிகளாக எழுந்தருளுகிருள். சுடராகிய சூரியனின் நடுவில் தானும் சுடராக - ஜோதியாக எழுந்தருளுகிருள். உரியகாலத்தில், வேதியரொழுக்கத்துக்கேற்ற நியதிகளைப் புரியாதவர் என அயலார் அபிராமி பட்டரை எண்ணினர். ஆனல் அவரோ சூழும் சுடர்க்கு நடுவே சுடரும் தேவியினை எக்காலமும் உள்ளேகண்டவர். அக்காட்சி வீழும்படியும் விள்ளும் படியும் உள்ள நிலையில் இல்லாததால் பிறர் அதனை அறிந்திலர்

(8) இடை, பிங்கலை என்னும் இரண்டு நாடிகளுமே சூழும் சுடர்கள் என்றும் அவற்றுக்கு இடையில் சுழுமுனை நாடியில் இயங்கும் குண்டலினியே நடுவே சுடரும் சுடர் என்றும் விளக்குகிருர் உரையாசிரியர் திரு. சண்முகநாதன் அவர்கள்.

(9) த்ரிகோணந்தர தீபிகா '-' முக்கோணத்துள் விளங்கும் சுடர் ' என்று சகஸ்ரநாமம் குறிப்பிடுகிறது. ஸ்ரீ சக்ரமும் சூழும் சுடர் ஆகும். ஏனெனில் பலதத்துவங்கள், சித்திதேவிகள், பரிவாரங்கள், ஆவரணங்கள் ஆகியவற்ருல் சூழப்பட்டுள்ள ஸ்ரீ சக்ரத்தின் நடுவில் விளங்கும் சுடர்போல் அம்பிகை வீற்றிருக்கிருள். ஸ்ரீ சக்கரத்து பிந்து மண்டலமே அச்சுடரின் நடு' ஆகும். ' ஒளிநின்ற கோணங்கள் ஒன்பது' என பட்டரும் குறிப்பிடுவார்.

(10) அவ்வாறே சூழும்சுடர் என்பது அமுதத்தேக்கத்தால் சூழப்பட்டுள்ள மூலாதாரச் சக்கரம் ஆகும். அங்கு அன்னை குண்டலினி வடிவாய் உறங்கும் சுடராக உறைகிறாள். பின் சகஸ்ரார கமலத்திலும் சூழும் சுடர்க்கு நடுவாய் ஒளிமிக்க காட்சி தருகிறாள்.

(11) நாம் அறிந்த உலகங்கள் கடல்கள் மலைகள் அனைத்துக்கும் அப்பாலுள்ள ஸ்ரீ நகரமென்னும் நகரத்தில் சிந்தாமணி கிருஹமெனும் வீட்டில் ஸ்ரீ சக்ரமாகிய ஆசனத்தில் அன்னை அமர்ந்திருக்கிறாள். அந்த நகரினைச் சுற்றிப்பல உலோகக் கோட்டைகள், பல பத்மாடவிப் பிராகாரங்கள், பல பரிவார தேவதைகள் உறையும் உலகங்கள் யாவும் சூழ்ந்திருக்கின்றன. ஒளிமிக்க அவளது இல்லமும் ஸ்ரீ சக்ரமும் சூழும் சுடர்கள். அதன் நடுவில் அமரும் அவள் சுடரும் சுடர்.

(12) விண்டுரைக்க வியலாத தன்மையதாய் எப்போதும் எனது குண்டலினி மார்க்கத்தில் சுடர் விட்டு எழுந்தருளித் திருக்காட்சி தந்தருளும் அவளது தரிசனம் காரணமாகவே இருளடர்ந்த அமாவாசையினைச் சுடரொளிவீசும் பௌர்ணமி என்றார். எவ்வுலகினுக்கும் எட்டாது ஆத்ம ஒளியின் – உள்ளொளியின் நடுவே காணும் அக்காட்சி அயலார் அறியும் வண்ணம் எடுத்தியம்பவியலுமோ? அவளே விரும்பினால்தான் அதனைப் பிறர் அறியக்காட்டவியலும் என்பது குறிப்பு. மூவாயிரம் முறை காயத்ரி ஜபம் செய்ததன்பலனை எய்துதல் இப்பாடலின் பாராயண பலன் ஆகும்.

---

**கடிதம்:**

ஆர். இரவிசங்கர் சென்னை 24
S/o. Dr. கே. இராமலிங்கம் 25—4—84

* தேரெழுந்தூரில் கம்பனுக்கோர் தேரெழுந்து வரப் போகும் செய்தி செவியில் தேனெனப்பாய்ந்தாலும், இவ்வளவு பணம் அதற்குச் செலவிடப்படுவது சரிதானா என்ற கேள்வி மனத்தில் எழுந்தது. அந்த ஐயத்தைக் 'கம்பனுக்கோர் கலைக் கோயில்' கட்டுரை (ஆசியுரை) போக்கிவிட்டது.

இளந்தலைமுறையினர் அறியாத பல புதிய கருத்துக்கள் இக்கட்டுரையில் இடம்பெற்றுள்ளன. இச்செயற்கரிய செயலைச் செய்த "ஞானசம்பந்தத்துக்கு" நான் பணிவன்புடன் நன்றி செலுத்துகிறேன்.

# அன்பகம்

## ( செவிடு, ஊமையர் சிறப்புப் பள்ளி )

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள், சமய சமூகப் பணியாற்றுவதற்காக ஸ்ரீ குருஞானசம்பந்தர் பணி மன்றத்தைத் தோற்றுவித்து, அப்பணி மன்றம் செவ்வனே பணியாற்றிட அருளாசி வழங்கி வருகிறார்கள்.

மயிலாடுதுறைஸ்ரீகுருஞானசம்பந்தர் பணிமன்றம் செவிடு – ஊமையர், சிறப்புப் பள்ளி ஒன்றினை 'அன்பகம்' என்ற பெயரில் நடத்தி வருகின்றது.

செவிடு – ஊமை, குழந்தைகள் நலத்திற்காக, 1981 – ஆம் ஆண்டு மாயூரம் சுழற்சங்க ஆதரவில் மாணவன் ஒருவனுடன், அன்பகம் என்னும் சிறப்புப்பள்ளி, மயிலாடுதுறையில் தொடங்கப்பட்டது. மயிலாடுதுறை சுழற்சங்கமும் இன்னர்வீல் சங்கமும் இப்பள்ளிக்கு நல்லாதரவினைத் தொடர்ந்து நல்கி வருகின்றன,

அன்பகத்தில் 20, மாணவ, மாணவியர் இன்று பயில்கின்றனர். இவர்களுள் சிலருக்குத் தங்கும் வசதியும், உணவும் அளிக்கப்பெறுகின்றன. புறக்கணிக்கப்பட்ட இச்சிறுவர்களை மேம்படுத்தும் வேள்வியில் அன்பகம் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளது. இப்பள்ளியில், மாணவர்களுக்குப் பேச்சுப் பயிற்சி, அடிப்படைக் கல்வி, தன்னம்பிக்கை ஊட்டுதல், கலை ஆர்வத்தை வெளிப்படுத்தல் போன்ற, இன்னபிறவற்றை அதற்குரிய நவீன கருவிகளுடன், ஏற்ற ஆசிரியர்களின் துணை கொண்டு பயிற்றுவிக்கப்படுகின்றன. உரியபருவம் வந்தவுடன் இம்மாணவர்களுக்குத் தொழிற்பயிற்சியளிக்கவும் திட்டமிடப் பட்டுள்ளது.

இப்பள்ளியின் வளர்ச்சிக்குச் சுழற்சங்கம், அரிமா சங்கம், இன்னர்–வீல் சங்கம், மற்றும் சேவை நிறுவனங்கள், சான்றோர் கள், உதவி வருகின்றனர். மயிலாடுதுறை இன்னர்வீல் சங்க உறுப்பினர்கள், வெகு நாட்களாக மிகவும் தேவையான நவீன பேச்சுப்பயிற்றும் கருவியினை ரு 6500/ – செலவில் இவ்வாண்டு வழங்கியுள்ளனர். மற்றும், நிரந்தர வைப்பு நிதியை வைத்திட இன்னர் வீல் சங்கமும், சான்றோர் பலரும் ஒப்பியுள்ளனர். இப்பள்ளியினை நடத்த மாதம் ஒன்றிற்கு ரூபாய்2000/ – தேவைப் படுகின்றது. பொருள் வசதியற்ற பல மாணவர்கள் அன்பகத்தின் உதவியினை எதிர்நோக்கியுள்ளனர். பள்ளியின் வளர்ச்சி குறித்துப்பிற கருவிகள் வாங்கிட, கட்டிடம் கட்டிட ரூபாய் ஒரு இலட்சம் செலவாகும் எனக் கணக்கிடப்படுகிறது


நற்பணிக்கு உதவிட, நல்லோர்களை நாடி வருகிறது அன்பகம்! இப்பள்ளிக்குக் கீழ்க்கண்ட முறையில் பண உதவியை அளித்திடலாம்.

1 கட்டிடத்தின் ஒரு பகுதியை வகுப்பறை - கட்டித்தருதல்.
2 தாங்கள் விரும்பும் பெயரில் வைப்புத்தொகையைவைத்து, அதினின்று கிடைக்கும் வட்டியைக்கொண்டு, பள்ளி வளர்ச்சிக்குத் தான் விரும்பும் வகையில் பயன்படுத்திக் கொள்ள அனுமதித்தல்.
3 மாதந்தோறும் அல்லது ஆண்டுதோறும் ஒரு குறிப்பிட்ட தொகையை வழங்குதல்.
4 கருவிகள் வாங்கிட உதவி புரிதல்.
5 மாணவர் ஒருவரைப்பள்ளிமூலம் வளர்க்கும் பொறுப்பினை ஏற்றல்.

குறிப்பு,— உதவிபுரிவோர் கீழ்க்காணும் முகவரிக்குத் தொடர்புகொள்ளவும்.

பொருளர்
ஸ்ரீ குருஞானசம்பந்தர் மிஷன்,
மகாதானத்தெரு, மயிலாடுதுறை-609 001.

மயிலாடுதுறை ஸ்ரீ குருஞானசம்பந்தர் மிஷன்
" அன்பகம் " ( செவிடர், ஊமையர் பள்ளி )



மயிலாடுதுறை இன்னர்வீல் சங்கத்தார்
அன்பளிப்பாகக் கொடுத்த பேச்சுப் பயிற்சிக் கருவியைச்
சென்னை உயர்நீதிமன்றநீதிபதி மாண்புமிகு மோகன் அவர்கள்
தொடங்கிவைத்தல் 31—3—84

# ஆண்டுகொண்ட தனிமலர்!

**பேராசிரியர் திரு. சொ. அரியநாயகம்** எம். ஏ.,
( கவிஞர் காராளன் )
ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் வித்யாலயக் கலைக்கல்லூரி, கோவை

பூமலரும் வில்லிபுத்தூர் புகழ்மலரும் வேளாளர்
பொழில்மலர மீனாட்சிக் கொடிமலர்ந்த அருள்மலரே!
புதுமலராய்ச் சுப்ரமண்யச் சிவமலரின் குலமலரே!
பிழிந்தமுதாய்ச் சிவபோக சாரமது தருமலரே!

மாமதுரைச் சொக்கேசர் மனம்மலரத் தமைநல்க
மலர்க்கரத்தால் ஏந்திஉயர் பூசனைசெய் தமிழ்மலரே!
மனுநீதிக்(கு) அருள்மலர்ந்த ஆருரன் தான்பரவும்
குருஞானப் பிரகாசன் அடிச்சார்ந்த தவமலரே!

நாமலரும் ஐந்தெழுத்தின் நலம்மலரும் மனம்மொழிமெய்த்
தவம்மலரும் குருவருளின் சீர்மலர்ந்த திருமலரே!
நதிமருவும் வில்வவனம் திகழ்தரும புரீசரொடு
நல்அபயாம் பிகைஅருளைத் தரிசித்த நறுமலரே!

தேமலரும் தமிழ்பெய்து சொக்கனருள் மலரெய்தி,
சித்தாந்த மணம்தந்த குருஞான சம்பந்த!
தருமபுர ஆதீனத் தலைமலரே! தாள்மலர்கள்
தந்தென்னை ஆண்டுகொண்ட தனிமலரே!
[வணங்குவமே!

# செய்திகள்

## ஆயில்யத்திருநாள் ஆலயவழிபாடு

### திருக்கடவூரில் :

தருமையாதீனம் 26 ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் ஆண்டு ஜன்மநட்சத்திர ஆயில்யத்திருநாள் ஆலய வழிபாடு 8—5—84 அன்று திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவரர் சுவாமி திருக்கோயிலில் மிருத்யுஞ்சயஹோமம், ஏகாதச ருத்ராஜபம் ஆகியவற்றுடன் மிகச்சிறப்பாக நடைபெற்றது. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் எழுந்தருளி வழிபாடாற்றி ஜன்ம நட்சத்திர விழாமலராக 'வார வழிபாடு' என்றநூலை வெளியிட்டு அன்பர்கட்கு அருட்பிரசாதம் வழங்கி ஆசீர்வதித்தார்கள்.

### திருக்கூடலையாற்றூரில் :

மாதந்தோறும் நடைபெறும் ஜன்மநட்சத்திர திருநாள் வழிபாடு இம்மாதம் 8—5—84 அன்று திருக்கூடலையாற்றூர் அருள்மிகு புரிகுழல்நாயகி உடனுறைய அருள்மிகு நெறிகாட்டு நாயகர் திருக்கோயிலில் மிகச்சிறப்பாக நடைபெற்றது. சுவாமி அம்பாளுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன. தலத்திருப்பதிகம் பாராயணம் செய்யப்பட்டது. "திருக்கூடலையாற்றூர்த்திருப்பதிகம்" என்றநூல்வெளியிடப்பெற்றது, தருமையாதீனத்தமிழ்ப்புலவர் திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ. தலத்திருப்பதிகத்தினை விளக்கி உரையாற்றினர். அன்பர்கள் பலர் வழிபாட்டில் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

## குருவருளும் அருளுபதேசமும்

ஒவ்வொரு ஆங்கில மாதத்திலும் முதல் ஞாயிறன்று காலை சரியாகப் பத்து மணிக்குத் தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தை அன்பர்கள் வணங்கி வழிபட்டு அருளுபதேசம் பெறும் பிரார்த்தனைக் கூட்டம் ஆதீனத் திருமடத்தில் நிகழ்ந்து வருகின்றது. இம்மாதம் 6—5—84 அன்று 35 ஆவது வழிபாட்டுக்

கூட்டம் சிறப்பாக நடைபெற்றது. அன்பர்கள் திருநீறு பெற்ற ணிந்தனர். கூட்டுப்பிரார்த்தனை நிகழ்வுற்றது. இம்மாதம் திருத் தொண்டர் புராணச்சிந்தனையாகத் திருநாளைப்போவார்புராணம் உபதேசிக்கப்பட்டது. ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தில், திருநாளைப் போவார் என்ற காரணப்பெயரினை வரலாறு கொண்டு விளக்கி, நந்தனார் என்பது இயற்பெயர் என அருளினார்கள். "எல்லாக் குலத்திலும் உயர்ந்தவர் உண்டு" என்னும் கொள்கையைத் திருநாளைப்போவார் வரலாறு நமக்கு உணர்த்துகிறது என்பதை விளக்கினார்கள். சேக்கிழார் அருளிய திருநாளைப்போவார் புராணத்தையும் கோபால கிருஷ்ணபாரதியார் செய்தநந்தனார் சரித்திரக் கீர்த்தனைகளையும் ஒப்பிட்டு ஆய்வுநோக்கோடு அருளியமைசிந்தனையைத் தூண்டுவதாக அமைந்திருந்தது.

மயிலாடுதுறைப் பெருமக்களும் அன்பர்களும் கலந்து கொண்டு பயன்பெற்றனர். அடுத்து 36-ஆவது அருளுபதேசம் 3—6—84 அன்று நிகழ்வுறும். அன்பர்கள் கலந்துகொண்டு பயன்பெறுவார்களாக.

## சித்திரைத் திங்கள் பெருவிழா

*சீகாழியில் :*

தருமையாதீனத்துக்குச் சொந்தமான சீகாழி சட்டைநாத சுவாமி தேவஸ்தானத்தில் 6—4—84 அன்று தொடங்கிச் சித்திரைத் திருவிழா நிகழ்வுற்றது. 7—4—84 இரண்டாம் திருநாள் அன்று திருமுலைப்பால் விழா. தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானத்தில் தரிசனத்துக்கு எழுந்தருளி இருந்தார்கள். ஸ்ரீதிருஞானசம்பந்தசுவாமிகள் சிவிகையில்எழுந்தருளியவுடன் தருமையாதினம்ஸ்ரீலஸ்ரீகுருமகாசந்நிதானத்தில் புதுக்கோட்டை திரு. எஸ். சுப்பிரமணிய தேசிகர் அவர்களுக்குப் பொன்னாடை போர்த்திப் பணமுடிப்பு வழங்கி 'திருமுறைக் கலாநிதி' என்ற பட்டம் அளித்து ஆசியருளினார்கள். திருவிழா நாட்களில் மாலையில் கருத்தரங்கம் பட்டிமன்றம், வழக்காடுமன்றம், கவி யரங்கம் திருமுறை விழா முதலிய நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

*திருக்கடவூரில் :*

திருத்தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் 6—4—84 அன்று தொடங்கிச் சித்திரைப் பெருவிழா சிறப்பாக நடைபெற்றது. 11—4—84 அன்று காலசம்காரத் திருநாள். அன்று தருமை யாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் எழுந்தருளி வழி

பாடாற்றி அன்பர்களுக்குப் பிரசாதம் வழங்கினர்கள். விழா நாள்களில் சொற்பொழிவுகளும், திருமுறை விழாவும் சிறப்பாக நடைபெற்றன.

### திருப்பனந்தாளில் :

தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் 6—4—84 அன்று தொடங்கிச் சித்திரைப் பெருவிழா மிகச்சிறப்பாக நடைபெற்றது விழா நாட்களில் சொற்பொழிவுகள் இசைநிகழ்ச்சிகள் ஆகியன நிகழ்வுற்றன. அன்பர்பலர் சுவாமிதரிசனம் செய்தும் நிகழ்ச்சிகளில் பங்குகொண்டும் பயனுற்றனர்.

## சீகாழி ஸ்ரீ சட்டைநாதருக்குச் சிறப்பு வழிபாடு

தருமையாதீனத்திற்குச் சொந்தமான சீகாழி ஸ்ரீ சட்டைநாத சுவாமிக்குச் சிறப்பு வழிபாடு 20—4—84 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது. காலையில் ஸ்ரீ முத்துச்சட்டைநாத சுவாமி யதாஸ்தானத்திலிருந்து புறப்பாடு ஆகி, வலம்புரி மண்டபத்திற்கு எழுந்தருளலும், அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றபின் இரவு புறப்பாடாகி யதாஸ்தானத்துக்கு எழுந்தருளலும் அதன்பின் புழுகாப்புத் தரிசனமும் நிகழ்வுற்றன. தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் எழுந்தருளி வழிபாடாற்றி அன்பர்கட்கு அருட்பிரசாதம் வழங்கினர்கள். தருமையாதீனம் ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர்பள்ளித் தமிழாசிரியர் வித்துவான், திரு. கா. ம. கண்ணப்பன், எம்.ஏ., 'ஆபதுத்தாரணர் மாலை' என்ற பொருளில் சொற்பொழிவு ஆற்றினர், அன்பர் பலர் வந்திருந்து சொற்பொழிவு கேட்டும் சுவாமி தரிசனம் செய்தும் பயனுற்றனர்.

---

## பசு

அறியும் திறன் உள்ளவர்களுக்கு அழுத்தமாகக் கூறுகிறேன்: பசு ருத்திரர்களின் தாய்; பசு, தேவதைகளின் பெண்; அதிதி புத்திரர்களின் சோதரி. அவள் இறவாத தன்மை கொண்டவள். ஆதலின் வேண்டுகிறேன். அவளைக்கொல்லாதீர்கள். ஒரு குற்றமற்ற அவள் கொல்லத்தக்கவளல்ல.

— ரிக்வேதம்.